இருக்கிறது. சங்கராபுரத்தில் பிரதம சுகாதார நிலையம் இப்பொழுது இல்லை. அதுதான் பதிலில் தெரிவிக்கப்பட்டது. ஆனல் சங்கராபுரம் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரி இருக்கிறது. அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் ஆணை யிட்டு இருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மீனவர்கள்

* 125 வின.—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில், நாட்டுப் படகு வைத்து மீன் பிடிப்பவர்களுக்கும், விசைப்படகு மூலம் மீன் பிடிப்பவர்களுக்கு மிடையில் தகராறு ஏற்பட்டு, விசைப்படகினர் நாட்டுப் படகினர் போடும் வலைகளைச் சேதப்படுத்துவதும், நாட்டுப் படகினர் இதனல் பாதிக்கப்படுவதுமாக இருப்பதைத் தவிர்க்கவென எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இராமநாதபுரம் மாவட்ட நாட்டுப் படகு மீனவ சங்கத் தலைவரையும் அவர்களைச் சேர்ந்த சிலரையும் மீன்துறை உதவி இயக்குநர், சிவகங்கை, அவர்கள் நேரில் பேசி நாட்டுப் படகுக்காரர்களும், விசைப்படகுக் காரர்களும் மீன் பிடிப்பது சம்பந்தமாக மீன்துறை இயக்குநரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் கலந்து பேசி ஒரு முடிவு எடுக்கும் வரை அமைதியாக இருக்கும்படியும் எவ்வித வன்முறையில் இறங்க வேண்டாமென்றும் கேட்டுக்கொண்டதன்பேரில் அவர்களும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

திரு. வீ. மலைக்கண்ணன் : தலைவரவர்களே, நாட்டுப்படகுகளின் மூலம் மீன் பிடிப்பவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக அந்தத் தொழிலை நடத்துகிருர்கள். விசைப்படகுகளில் மீன் பிடிப்பவர்கள் அதை வாணிபமாக, அதாவது லாப நோக்கத்தோடு செய்கிருர்கள். எனவே, வாழ்க்கைக்காகத் தொழில் செய்யும் அந்த மக்களுக்கு அடிக்கடி இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படுகின்றன. எனவே, அதை வரையறுத்து விசைப்படகு வைத்திருப்பவர்கள் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் சென்றுதான் மீன் பிடிக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 டிசம்பர் 12

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, ஏற்கெனவே விசைப்படகுகாரர்கள் 5 மைல்களுக்கு அப்பால் சென்றுதான் மீன் பிடிக்க வேண்டுமென்றும், நாட்டுப் படகுக்காரர் களும், கட்டுமரக்காரர்களும், 5 மைல்களுக்கு உள்ளே மீன் பிடிக்க வேண்டுமென்றும் முறையிருக்கிறது. அதை மீறுவதால்தான் இப்படிப்பட்ட சச்சரவுகள் ஏற்படுகின்றன. அதைக் கண்காணிக்க காவல் ரோந்துப் படைகள் விடப்படுகின்றன. இருந்தாலும் இரு சாரரும் எல்லையை மீறிவிடுகிறார்கள். அதனால்தான் சண்டைகள் ஏற்படுகின்றன.

Central Government assistance for drought-affected areas

* 126 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) the details of grants received from the Central Government for the drought-affected areas in Tamil Nadu during 1972: and

(b) the districts in which they have been distributed,

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செலவிட, நடப்பு நிதி யாண்டு 1972–73-ல், இந்திய அரசிடமிருந்து எந்தவித மானியத்தை யும் மாநில அரசு பெறவில்லை. இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங் களில் செயல்படுத்தப்பட்டுவரும் மத்திய அரசு பொறுப்பேற்று நடத்தும் திட்டமான "வறட்சி பீடிக்கும் பகுதிகள் திட்டம்" குறித்து, இந்திய அரசு 1972–73-ல் ஆகும் செலவின் ஒரு பகுதிக்காக 25—8—1972-ல் ரூ. 18 லட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தலைவரவர்களே, இந்தப் பதில் தயாரிக்கப்பட்ட பிறகு, தமிழ் நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக மத்திய சர்க்காரிடம் நாம் நிதி உதவி கோரியிருந்தோம், மத்திய சர்க்கார் 1.5 அதாவது $1\frac{1}{2}$ கோடி ரூபாய் நிதி உதவி அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, இந்தியத் துணைக்கண்டத் திலிருக்கும் சில மாநிலங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை யும் அதிலே தமிழகமும் ஒன்று என்பதையும் பிரதம மந்திரி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஆந்திரத்தில் ஒரு இடத்தில் குறிப் பிட்டார்கள். அதை எதிர்பார்த்து மாண்புமிகு டாக்டர் கலைஞர்